மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு பிறப்பிக்கப்பட்ட ஒரு ஆணையின்படி வெளி மாநிலத்திலே இருந்து இங்கே வந்து வாழ்கிறவர்கள், அங்கே பிற்படுத்தப்பட்டவர்களாக இருந்தாலும், இங்கே பிற்படுத்தப்பட்டவர்களாகக் கருதமாட்டார்கள் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. மேலும் பிற்பட்டோர் நலக் குழுவினிடத்திலே சாட்சியம் அளித்த போது இல்லத்துப் பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்த பிரதிநிதிகள், இரண்டாம் பிற்பட்டோர் நலக் குழுவை சந்தித்து சாட்சியம் அளிக்கும் போது, தாங்கள் ஈழவர், பணிகர், இல்லத்தார், இல்லத்துப் பிள்ளைமார் என வெவ்வேறு பெயர்களிலே அழைக்கப்படுவதாகவும் அவர்களுக்குள் கொள்வினை கொடுப்பினை உண்டு என்றும் தெரிவித்து, இவர்கள் கேரளாவைச் சார்ந்த ஈழவர்களும் தாங்களும் ஒரே இனமே எனக் கூறினர். அதனாலே தான் இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழு ஈழவர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்டவர் பட்டியலில் சேர்க்கவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வால்பாறை பகுதியிலே வாழ்கிற மக்களைப் பற்றித் தெரிவிக்கிறார்கள். அவர்களைப் பற்றிய முழு விவரத்தையும் அரசுக்கு அறிவித்தால், அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 420, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு,—மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

உறுப்பினர் இருக்கையில் இல்லை. @

வினா எண் 421, திரு. தி. சாத்தையா— மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

421—

நல்லமங்களத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*4069— திரு. தி. சாத்தையா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நல்லமங்களத்தில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

---

@ இவ்வினா மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 7–4–1992 அன்று எடுத்துக் கொள்ளப் பெற்றது.

1992 ஏப்ரல் 1]

(அ) இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த நல்லமங்களத்தில் புதியதாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது இராஜபாளையம் பஞ்சாயத்து யூனியனை சேர்ந்த நல்லமங்கலம் கிராமத்திலும் அதன் பக்கத்தில் உள்ள சுற்று வட்டார கிராமங்களிலும் கிட்டத்தட்ட 25 ஆயிரம் ஜனத் தொகைக்கு அதிகமாக இருப்பதாலும், அங்கிருந்து இராஜபாளையம் 9 கிலோ மீட்டர் தூரத்தில் இருப்பதாலும் அங்குள்ள மக்கள் மருத்துவ வசதி அடைவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகையினால் வரும் ஆண்டிலாவது இதைப் பரிசீலிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற கேள்விக்கு நிறைய ஏற்கெனவே இந்த மன்றத்திலே பதில் சொல்லப்பட்டு இருக்கிறது. 30 ஆயிரம் ஜனத் தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற வகையிலே தான், கொள்கை அளவிலே நாம் வகுத்து வைத்து இருக்கிறோம். அதன்படி பார்த்தால் இந்த ஒன்றியத்திலே 1 இலட்சத்து 37 ஆயிரத்து 200 பேர் குடி இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே 5 இடங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன. எனவே, இப்போது கூட அந்த இடத்திற்கு கொஞ்சம் கூடுதலாகவே இருக்கின்ற காரணத்தினால் இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ கூட இதைப் பரிசீலிப்பது சிரமமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. தி. சாத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முடியாது என்று கூறிவிட்டார்கள். அங்குள்ள ஒரு பெரியவர் மனமுவந்து அங்கே ஒரு பிரைமரி ஹெல்த் சென்ட்டர் கட்டிடம் கட்டித் தருவதற்கு முன் வந்துள்ளார். அதற்கு அரசின் அனுமதி கேட்டுள்ளார். அதற்கு அரசிடமிருந்து எவ்வாறு அனுமதி பெற வேண்டும்? இப்படி பிரைவேட்டாக அதாவது தனி சிட்டிசன் கட்டிடம் கட்டிக்கொடுக்க முன் வரும்போது அவர்கள் அரசின் அனுமதியை வேண்டி அணுகுகிறார்கள். அதை அரசு அமைத்துத் தருமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த ஒன்றியத்திற்குள்ளே இருக்கின்ற 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஏதாவது, ஒன்றுக்கு தனியார் கட்டித் தர வேண்டுமென்று கருதினால்

அதை நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறது. ஏற்கெனவே இருந்த முறை— அவர்கள் பணத்தை பி.டபிள்யூ.டி.-யில் கட்டி, அவர்கள் கட்டித் தர வேண்டுமென்ற நிலை இருந்தது. இப்போது அவர்களே கட்டிக் கொடுக்கலாம். ஆனால், பி.டபிள்யூ. டி.-யிலே என்ன ஸ்கெட்ச் போட்டுக் கொடுக்கிறார்களோ அந்த பிளானை வைத்துக் கொண்டு செய்ய வேண்டுமென்ற முறையும் வைத்து இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் நேரிலே வந்தால் சந்தோஷமாக இன்றைக்கு இருக்கிற நிதி பிரச்சினையின் காரணமாக நாங்களே கூட வந்து அதைச் செய்வதற்கு தயாராக இருக்கிறோம். ஆனால், புதிதாக கட்டடம் கட்டிக் கொடுப்பதன் மூலமாக ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஆரம்பிக்க முடியாது. காரணம் தொடர் செலவினம் அரசாங்கத்தினுடைய நிலையில் வந்து நிற்கும் என்ற காரணத்தால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏற்கெனவே இருப்பதற்கு கட்டிக் கொடுத்தால் அதை ஏற்றுக்கொள்ளலாம்.

முற்பகல் 9-55

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 422 திரு. ப. கலியபெருமாள்— மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

422—

<u>தேக்கு மரங்கள் விற்பனை.</u>

<u>*5000—திரு. ப. கலியபெருமாள்</u> : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு அறிவிக்கும் வனத் துறை திட்டங்களை அதிகாரிகள் நன்முறையில் செயல்படுத்தாததால் பல இடங்களில் தேக்கு மரங்கள் பட்டுப்போன நிலையில் உள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை விற்பனை செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வனத் துறை அதிகாரிகளின் கவனக்குறைவால் தேக்கு மரங்கள் ஏதும் பட்டுப்போகவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.